பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

23 11 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- மாணவர்கள் கல்வியறிவுடன் ஆளுமைப் பண்புகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- மகளிர் மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பில்லாத சூழல் நிலவுவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.
- ஹாங்காங் ஆசிய ஜூடோ ஓபன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 3 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

ஜோகன்னஸ்பர்கில் நடைபெற்று வரும் ஜி-20 உச்சி மாநாட்டின் இரண்டாவது அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர், பேரிடர்கள், பருவநிலை மாற்றம், எரிசக்தி, உணவுப் பொருள் உள்ளிட்ட துறைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு நாடுகளிடையேயான ஒத்துழைப்பு அவசியம் என்றும், மனிதகுலத்தின் வளர்ச்சியை மையமாகக் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தலைமையில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டில் பேரிடம் அபாயங்களைக் குறைப்பதற்கான பணிக்குழுவின் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கு பிரதமர் வரவேற்பு தெரிவித்தார்.

விவசாயம், உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு பருவநிலை மாற்றம் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற சவால்களை எதிர்கொள்வதற்கு இந்தியா மேற்கொண்டு வரும் தொடர் நடவடிக்கைகளை திரு. நரேந்திர மோடி எடுத்துரைத்தார்.

<<<<>>>>

மாணவர்கள் கல்வியறிவுடன் ஆளுமைப் பண்புகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இதனைத் தெரிவித்துள்ள அவர், புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை மாணவர்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

குஜராத் மாநிலம் அகமதாபாதில் நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள பல்வேறு அரங்குகளை பார்வையிட்டு குழந்தைகளுக்கு புத்தகங்களை வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்களின் திறன் மேம்பாட்டில் புத்தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கூறியுள்ளார்.

புத்தகக் கண்காட்சிகள், இலக்கிய நிகழ்ச்சிகள், அறிவுசார் போட்டிகள், புத்தகம் வாசிப்பு போன்றவை குழந்தைகளின் தனித்திறமையை வளர்த்துக்கொள்ள உதவிடும் என்று திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

மகளிர் மேம்பாட்டிற்கு மாநில அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மதுரையில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நடப்பாண்டில் 620 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்து சாதனை படைத்துள்ளதாக அவர் கூறினார்.

பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

<<<<>>>>

விவசாயிகளின் மேம்பாட்டிற்காக மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் காரணமாக நெல் உற்பத்தி 3 மடங்கு அதிகரித்துள்ளதாக மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நெல் சாகுபடியை அதிகரிக்க குறுவை நிதித்தொகுப்பு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பில்லாத சூழல் நிலவுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், விழுப்புரம் அருகே திமுகவைச் சேர்ந்த ஒருவர் பெண் ஒருவரை தொடர்ந்து பாலியல் வன்கொடுமை செய்ததாக வரும் செய்திகள் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது மாநில அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தெற்கு அந்தமான் கடற்பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி உள்ளிட்ட 16 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒருசில பகுதிகளில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஆரோக்கியமான வாழ்வுக்கு இயற்கையுடன் இணைந்த வாழ்வியல் முறை அவசியமாகிறது.

தேசிய இயற்கை மருத்துவ தினத்தை முன்னிட்டு, சேலம் மாவட்டம் சங்ககிரியில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யோகா மற்றும் இயற்கை மருத்துவர்கள் மகாத்மா காந்தியின் உருவ அமைப்பில் அணிவகுத்து நின்றது பலரின் கவனத்தை ஈர்த்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யா-யுக்ரைன் இடையேயான அமைதி ஒப்பந்தத்தில் யுக்ரைனின் நலன்கள் கருத்தில்கொள்ளப்பட வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

பாகிஸ்தானின் ஃபைஸ்லாபாதில் உள்ள தொழிற்சாலையில் நேரிட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளது.

**<<<<>>>>**

இந்திய பெருங்கடல் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக இந்திய கடற்படைக்குச் சொந்தமான சாவித்ரி போர்க்கப்பல் செஷல்ஸ் சென்றடைந்தது.

தேசிய மாணவர் படையின் 78வது நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

<<<<>>>>

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் மாநில அமைச்சர்கள் திரு மூர்த்தி, திரு மனோ தங்கராஜ் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் அய்யனடைப்பு கிராமத்தில் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் கட்டடப்பட்ட 220 குடியிருப்புகளை கொண்ட அடுக்குமாடி கட்டிடத்தை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் நேற்று திறந்துவைத்தார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம தக்கோலத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு. ஆர். காந்தி வழங்கினார்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி நடைபெற்றது.

**<<<<>>>>**

வேலூர் அருகே கோணவட்டம் என்ற பகுதியில் லாரி கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் ஓட்டுநர் உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர்.

**<<<<>>>>**

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் கடற்பகுதி வழியாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

**<<<<>>>>**

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் கலாச்சார பாரம்பரிய வார விழாவை முன்னிட்டு பல்வேறு சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஹாங்காங் ஆசிய ஜூடோ ஓபன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 3 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

ஹாங்காங்கில் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் யாமினி மௌரியா தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

மகளிர் 63 கிலோ எடைப் பிரிவில் Unnati Sharma-வும், 48 கிலோ எடைப் பிரிவில் சிம்ரனும் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளனர்.

ஆடவர் 73 கிலோ எடைப் பிரிவில் அருண் குமார் வெண்கலப் பதக்கம் வென்றார்.

**<<<<>>>>**

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா - பாலஸ்தீனம் இடையேயான ஆட்டம் டிரா ஆனது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

**<<<<>>>>**

3 11 2025 6 45 Sports-3 பார்வை

குறைபாடு உடையோருக்கான உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கொழும்புவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வென்றது.

**<<<<>>>>**